## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 11 ஆம் இலக்க அரசாங்க கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01**

I, நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றிய கணக்கீட்டு அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

II. 138 ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய தேவைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது பிரதான வியாபார நிலையத்தின் பெயர்

(ii) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் பிரதான பணிகள்

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 02**

கிரயம் தனித்தனியாக கணிப்பிடப்பட்டு இருப்பு பெறுமதியிடுவதற்குப் பதிலாக சகல உற்பத்தியினதும் சராசரியான கிரயத்தின் பிரகாரம் இருப்பு பெறுமதியிடப்பட்டமையால் மரமுந்திரிகையுடன் அண்மித்த உற்பத்தியின் சந்தை விலை சராசரிக் கிரயத்தைவிட குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10**

17 ஆவது பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் பயன்படுத்துவோருக்கு முக்கியமானதாகையால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

I. முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 19 மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமையால் அதன் நியாயப் பெறுமதியைக்

காண்பிப்பதற்காக மீள் கணிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

II, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிதாக மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு திரண்ட பெறுமானத்தேய்வு, மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு மற்றும் கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமானத்தேய்வு என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

---

நியமத்தின் பிரகாரம் ஊழியர் நலன்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள் உரிய பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37**

---

நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு உத்தியோகத்தர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41**

---

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகை மரம் உயிரியல் விஞ்ஞான சொத்தொன்றாவதுடன் அந்த சொத்துக்கள் நியமத்தின் பிரகாரம் நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் பின்வரும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

I கமநல செயற்பாடுகளுக்குரிய நிதி அபாய தந்திரோபாயம்

II, சகல உயிரியல் விஞ்ஞான சொத்துத் தொகுதிகளினதும் பணிகளினதும் தன்மை

III. சகல உயிரியல் விஞ்ஞான சொத்துக்களினதும் பௌதீக அளவு மற்றும் காலப்பகுதியில் பெறப்பட்ட விளைச்சல்களுக்குரிய நிதிரீதியற்ற முன் அளவிடை மதிப்பீடு

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பிற்கு மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 43,968 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 364,664 தொகையான செலவினம் அட்டுறு செலவினமாகக் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் நெதகமுவ செயன்முறை நிலையத்தில் 2015 செப்தெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 53,000 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களுக்காக செலுத்தவேண்டிய தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) (i) 2005 ஏப்ரல் 08 ஆந் திகதி கமநல விற்பனை அபிவிருத்தி கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் மற்றும் உதவிக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் ஊடாக திறைசேரியிலிருந்து 6 சதவீத வருடாந்த வட்டிக்குப் பெறப்பட்ட ரூபா 3,500,000 கடன் தொகையொன்று

நீண்ட கால கடனின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அந்தக் கடன் தொகைக்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 210,000 தொகைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரை செலுத்த வேண்டிய வட்டி ரூபா 2,240,000 தொகை நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயிர்க் காப்புறுதிக்காகச் (Crop Insurance) செலுத்த வேண்டியதாக இருந்த ரூபா 791,465 தொகை நீண்ட கால பொறுப்புக்களின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மிஹிந்தலையில் வணிக நாற்றுமேடையில் நிர்மாணிக்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கிணற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 517,507 ஆக இருந்த போதிலும் நிலையான சொத்தின் கீழ் அந்தப் பெறுமதி ரூபா 465,756 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 51,751 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | கூட்டுத்தாபனம் வருமானவரி கடப்பாட்டின் கீழான கூட்டுத்தாபனமாக இருந்த போதிலும் 2011/2012, 2012/2013, 2013/2014 மற்றும் 2014/2015 மதிப்பீட்டு வருடங்களில் வருமானவரி கூற்றுக்களைத் தயாரிப்பதற்கோ அல்லது வருமானவரி செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டம் மற்றும் 2009 இன் 09 ஆம் இலக்க சேதத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டம் | மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை வழங்குகின்ற மற்றும் பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனமாக இருக்கின்ற போது காலாண்டு புரள்வு ரூபா 3 மில்லியனுக்கு மேற்படுகையில் அல்லது வருடாந்த புரள்வு ரூபா 12 மில்லியனுக்கு மேற்படுகின்ற போது பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகளுக்காக பதிவு செய்யவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | இடர் கடன் செலுத்தும் போது கடனாளியினதும் பிணையாளியினதும் சம்பளத்தில் 40 சதவீத மேவுகை எல்லையை விஞ்சி கடன் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | அரசாங்க நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் உரியவாறு அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஊழியர்களுக்கு செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தருக்கு மாதமொன்றிற்கு ரூபா 5,000 வீதமும் ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 1,500 வீதமும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் வரை போக்குவரத்துப் படியாக ரூபா 2,368,801 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | சுற்றறிக்கையில் வாகனக் கையளித்தல் மற்றும் விற்பனை வருமானம் தொடர்பான ஆலோசனையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் வாகன விற்பனை வருமானம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் வாகன விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 5,306,351 தொகையான வருமானம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 47,728,042 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 26,057,641 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறையில் ரூபா 21,670,401 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வணிகப் பிரிவின் வருமானம் ரூபா 40,073,524 இனால் குறைவடைந்தமை மற்றும் மரமுந்திரிகை செயற்திட்ட சேவைச் செலவினம் ரூபா 9,254,364 மற்றும் நாற்றுமேடைச் செலவினம் ரூபா 12,114,885 இனால் அதிகரித்தமை என்பன இந்த பற்றாக்குறைக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய மூன்று ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது நிதி விளைவுகள் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 44,233,832 தேறிய இலாபமாக இருந்த போதிலும் அது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 47,728,042 தேறிய நட்டமாக இருந்தது. எனினும் ஊழியர் ஊதியத்தையும் பெறுமானத்தேய்வையும் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 100,906,166 தொகையான பங்களிப்பு காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 41,851,749 வரை 141 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(இ) நிறுவனத்தின் ஊழியர் சம்பளத்திற்கான கொடுப்பனவு 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 45,592,055 ஆக இருந்த போதிலும் அது மீளாய்வாண்டின்போது ரூபா 71,884,727 ஆனமையால் 57 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) செயற்பாடுகளின் தொழிற்படுநிலை

I. கூட்டுத்தாபனத்தின் 2015 ஆம் ஆண்டின் வணிகப் பிரிவின் மொத்த இலாப விகிதம் 27 சதவீதமாக இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் அது 46 சதவீதமாக இருந்தமையால் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 19 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது.

II, மரமுந்திரிகையை அண்மித்த உற்பத்திகளில் 2011 முதல் 2014 வரை விற்பனை வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது 2015 ஆம் ஆண்டின் விற்பனை வருமானத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1992 இன் 11 ஆம் இலக்க அரசாங்க கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை, உற்பத்தியை செயன்முறைப்படுத்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், புலனாய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், விற்பனை தொடர்பாகவும் ஏனைய தகவல்களையும் சேகரித்தல், தயாரித்தல் பகிரங்கப்படுத்துதல், பகிர்ந்தளித்தல், மரமுந்திரிகையை அண்மித்த உற்பத்தி செயன்முறைகளுக்குத் தேவையான நபர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் உலக சந்தையில் உற்பத்திக்காக உள்ள கேள்வியை அதிகரித்தல் என்பனவே கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்களாகும். எனினும், நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மரமுந்திரிகையை அண்மித்த உற்பத்தி செயன்முறைக்காக தேவையான நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்காகவும் மரமுந்திரிகை உற்பத்திக்காக உலக சந்தை மேம்படுத்தலுக்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மரமுந்திரிகை பயிர்ச்செய்கை

(i) புத்தளம் மரமுந்திரிகைத் தோட்டத்திற்கு 960 ஏக்கர் பரப்பளவான காணி உரித்தாக இருந்தபோதிலும் அதில் பயிர்ச் செய்கைக்கு 240 ஏக்கர் அளவே பயன்படுத்தப்பட்டமையினால் 720 ஏக்கர் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) புத்தளம், கமன்தளுவ மற்றும் ஹாடி தோட்டங்களில் மரமுந்திரிகை மரங்கள் 30 வருடங்களை விஞ்சியமையினால் விளைச்சல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) மானிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

மரமுந்திரிகையை பரவலாக்குவதற்கான மானியத்திட்டத்தின் கீழ் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 200,000 ஒட்டு மரமுந்திரிகைக் கன்றுகளும் 80,000 நாற்று மரமுந்திரிகைக் கன்றுகளும வீதம் 560,000 கன்றுகள் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் 09 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 2,054,400 தொகையும் குருணாகலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 2,152,800 தொகையும் செலவிட்டு ஒட்டு மரமுந்திரிகைக் கன்றுகள் முறையே 34,240 மற்றும்

36,000 பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. புத்தளம் மாவட்டத்தில் 22,204 மரமுந்திரிகை கன்றுகள் அதாவது 65 சதவீதம் மற்றும் குருணாகலை மாவட்டத்தில் 13,027 மரமுந்திரிகைக் கன்றுகள் அதாவது 36 சதவீதம் அழிவடைந்திருந்தமையால் எதிர்பார்த்த இலக்கு அடையப்படாதிருந்தமை மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட 280,000 மரமுந்திரிகைக் கன்றுகளில் 130,303 மரமுந்திரிகைக் கன்றுகள் மாத்திரம் முளைத்திருந்தமை அவதானிக்கப்பட்டமையால் மானிய மரமுந்திரிகை செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பெறுபேறுகள் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2014 ஆம் ஆண்டில் மானியத்தின் கீழ் 4,500 ஏக்கருக்காக மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 422 ஏக்கரில் ஒரு மரமுந்திரிகை கன்றேனும் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

---------------------------------------------

மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ரூபா 3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.894 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அமுல்படுத்தப்பட்ட ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை பரிசோதனை செய்தபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு முன்னர் ஆராய்ச்சி முன்மொழிவொன்றை சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சிகளின் செயல்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் தொடர்ச்சியாகவும் முறையாகவும் செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மாதாந்தம் ஆற்றிய வேலையின் தற்போதைய நிலைமையின் செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கான நிதிப் பிரமாணங்கள் மற்றும் நிர்வாக சட்ட விதிக் கோவையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஊழியர்களின் வருகை, வெளிச் செல்லல் மற்றும் அலுவலக நேரத்திற்கான தாபனக்கோவை மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரமும் மேலதிக நேர படிகளின் கொடுப்பனவு கடை மற்றும் காரியாலய ஊழியர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் சாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 15,329 ஏக்கர் அளவான 9 தோட்டங்களில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டிருந்த போதிலும் அந்த தோட்டங்களில் 200 ஏக்கர் தோட்டம் விவசாயத் திணைக்களத்திற்கும் 1,874 ஏக்கர் அளவான 3 தோட்டங்கள் காணி மீளமைப்பு ஆணைக்குழுவிற்கும் 13,255 ஏக்கர் அளவான 5 தோட்டங்கள் அரசாங்கத்திற்கும் சொந்தமானதாக இருந்ததுடன் அந்தக் காணிகளை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்கு கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட மரமுந்திரிகை கன்றுகளுக்காக ரூபா 9,466,200 தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக இருந்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்

பெயரில் அமைச்சொன்று இது வரையிலும் இல்லாதிருந்தமையால் பணத்தை அறவிடுதல் பிரச்சினைக்குரியதாக இருந்ததுடன் அந்தக் காலப்பகுதியில் இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கை

கூட்டுத்தாபனத்தின் 2013 மற்றும் 2014 இன் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்காக அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் PF/PE/21 மற்றும் 2002.05.24 ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

I. உரிய ஆண்டின் பாதீட்டு எண்ணிக்கையை முன்னைய ஆண்டின் உள்ளபடியான செலவினத்துடன் மீளாய்வு செய்யக்கூடிய வகையில் பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் முன்னைய ஆண்டின் உள்ளபடியான செலவினம் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

II. மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட 26 விடயங்களின் செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 20 சதவீதம் முதல் 1102 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஊழியர் நிர்வாகம்

கூட்டுத்தாபனத்திற்கான நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

பணிப்பாளர் சபை அங்கீகரித்த முறையான பாதீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு

மரமுந்திரிகைத் தோட்டங்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகைக் கன்றுகளின் விற்பனையிலிருந்து கிடைக்க வேண்டிய கடன் பணத்தை அந்தக் காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.